1981 மே 7]

டாக்டர் கே. சமரசம் : தர்மபுரி நகரில் குமாரசுவாமிப் பேட்டையில் உள்ள சிவசுப்பிரமணியசுவாமி கோவில் திருப்பணிக்காக ரூ. 45,000 ஒதுக்கியும், அதற்கு வேண்டிய செயல் திட்டங்களை உருவாக்கியும் தந்ததற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன். அதேபோல் தர்மபுரி மாவட்டத்திலுள்ள இந்த சிவசுப்பிரமணியசுவாமி கோவில் மிகவும் புகழ்பெற்ற கோவிலாக இருப்பதால் என்னனென்ன வகையில் இதை அபிவிருத்தி செய்யவும் அல்லது வெளியே இருந்து வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளை அல்லது பக்தர்களை ஈர்த்து அவர்கள் கண்டுகளிக்கக்கூடிய வகையில் என்னென்ன முயற்சிகளை அரசு மேற்கொள்ளயிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : திருப்பணி பற்றிய கேள்வி இது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு தகவல்களைத் தெரிந்து கொள்ள விரும்பினால் தனிக் கேள்வி போடுமாறு வேண்டுகிறேன்.

திருமங்கலம் தொகுதியில் கிழவனேரி—நெடுங்குளம் ஆகிய ஊர்களை இணைக்கும் ஆற்றின் குறுக்கே பாலம்

*வினா எண் 776—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருமங்கலம் தொகுதியில் உள்ள கிழவனேரி, நெடுங்குளம் ஆகிய ஊர்களுக்குச் செல்வதற்கு ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(முற்பகல் 9-10)

திரு. என் எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒருமொத்தமாக வினாவிற்கு இடமில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிழவனேரி, நெடுங்குளம் ஆகிய ஊர்கள் திருமங்கலம் தொகுதியில் இருக்கின்றன. மழைக் காலங்களில் விவசாயப் பெருமக்கள், பெண்டிர் நோயாளிகள், கர்ப்பிணிகள் ஆகியோர் மருத்துவ வசதி பெறுவதற்கு இயலாமல் இருக்கின்ற காரணத்தினாலே, அரசு இதற்கு

முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால், இதுவரை முயற்சி எடுத்துக்கொள்ளப்படவில்லை. இனிமேலாவது அதைத் தொடங்குவதற்கு ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா? அல்லது இனிமேலாவது அது பரிசீலிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கிழவனேரி பாலத்திற்கு ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. கவுண்டன் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட சாலை கட்ட ரூ. 15 இலட்சம் தேவைப்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போல நெடுங்குளம் சாலைக்கு ரூ. 3 இலட்சம் தேவைப்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், நிதி நிலை சரியில்லாத காரணத்தினால், அது எந்தவிதமான திட்டத்தின் அடிப்படையிலும் வராத காரணத்தினால், இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே, அதன் முக்கியத்துவத்தைக் கருதி அடுத்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படுவது குறித்து பரிசீலிக்கலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் ஊராட்சியில் கிழவனேரியில் கவுண்டன் ஆற்றின் குறுக்கே இந்தப் பாலத்தைப் பற்றி மதுரை மாவட்ட வளர்ச்சிக் கவுன்சிலிலே தீர்மானம் கொடுத்த நேரத்தில், இந்தவிதமாகத்தான் ரூ. 15 இலட்சம் செலவாகும் என்று இலாகாவின் சார்பிலே விவரம் சொல்லப்பட்டது. ரூ. 15 இலட்சம் என்று சொல்வது சரியல்ல. யாரும் அந்த இடத்தைப் போய்ப் பார்த்து விவரம் சொல்லவில்லை. அதற்கு மிகுந்த குறைந்தளவுதான் செலவாகும். 2, 3 இலட்சம் ரூபாயில் அதைக் கட்ட முடியும். ஆகவே, மீண்டும் அதைப் பரிசீலித்து, அடுத்த ஆண்டாவது இந்தக் கிழவனேரி ஆற்றுப் பாலம் எடுத்துக்கொள்ளப்படுமா? இந்த நெடுங்குளம் பாலம் இந்த ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின்மூலம் எடுத்துக் கொள்ளப்படுமா அல்லது அடுத்த ஆண்டாவது எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, உயர்மட்டப் பாலம் என்பதை 2, 3 இலட்சம் ரூபாயில் போட முடியாது. தரை மட்டப் பாலம் கட்டுவதை கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்வதில்லை. வருங்காலத்தில் மாநிலத்தின் வளர்ச்சியை முன்னிட்டு, இன்னும் 20 ஆண்டு காலத்திற்குப் பின்னரும் அது நமக்குப் பயன்படத்தக்கதாக இருக்கவேண்டும் என்ற அளவிலே இனி போடப்படும் பாலங்கள் அத்தனையும் உயர்மட்டப் பாலங்களாகப் போடுவது என்பதைக் கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு ஏறத்தாழ ரூ. 15 இலட்சம் தேவைப்படும்.